# மெட்ரோ ரயில் சேவை: 10.63 லட்சம் பேர் பயணம்



சென்னை, நவ.1: கரோனா பொதுமுடக்க தளர்வுக்கு பின்பு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, 55 நாள்களில் (செப்.7 முதல் அக்.31) 10 லட்சத்து 63 ஆயிரத்து 416 பேர் பயணம் செய்துள்ளனர். குறிப்பாக, செப்டம்பர் மாதத்தை விட அக்டோபரில் அதிக மக்கள் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.

ஐந்து மாதங்களுக்கு பிறகு, மெட்ரோ ரயில் சேவை செப்டம்பர் 7-ஆம் தேதி தொடங்கியது. முதல்கட்டமாக, விமானநிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையும், இரண்டாம் கட்டமாக, பரங்கிமலையில் இருந்து கோயம்பேடு வழியாக சென்னை சென்ட்ரல் வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. மெட்ரோ ரயில் சேவை தொடங்கியபோது, குறைவான மக்கள் தான் பயணம் செய்தனர். பொதுமக்கள் பாதுகாப்பாக பயணிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதுதவிர, கியூ ஆர் குறியீடு முறையில் பயணச்சீட்டு பெறும் வசதி, பயண அட்டை முறை ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதன்பிறகு, பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் செப்டம்பர் 7-ஆம் தேதி முதல் அக்டோபர் 31-ஆம் தேதி வரை 55 நாள்களில் 10 லட்சத்து 63 ஆயிரத்து 416 பேர் பயணம் செய்துள்ளனர். செப்டம்பர் மாதத்தில் 24 நாள்களில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேரும், அக்டோபரில் 7 லட்சத்து 3 ஆயிரத்து 223 பேர் பயணித்துள்ளனர். அதிலும், அக்டோபர் 29-ஆம் தேதி அன்று 30,515 பேர் பயணம் செய்துள்ளனர். இதன்மூலமாக, அக்டோபர் மாதத்தில் பயணிகள் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்துள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: அக்டோபர் மாதத்தில், கியூ ஆர் குறியீடு (ணத இர்க்ங்) பயணச் சீட்டு முறையைப் பயன்படுத்தி 19,607 பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை முறையை (Travel Card Ticketing System) பயன்படுத்தி 4 லட்சத்து 34 ஆயிரத்து 289 பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயிலில் பயணிப்பவர்களுக்கு கியூ ஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டில் ஒருவழிப் பயண அட்டை, இருவழிப் பயண அட்டை, பலவழிப் பயண அட்டை ஆகியவற்றில் கடந்த செப்டம்பர் 11 முதல் 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

ஏற்கெனவே, செயல்பாட்டில் உள்ளபடி, மெட்ரோ ரயில் பயண அட்டைகளைப் (Travel Card) பயன்படுத்தி பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு 10 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படும். பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ரயில் பயணிகளின் வசதிக்காக, அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள அனைத்து வழிகளும் பொதுப் பயன்பாட்டுக்குத் திறக்கப்பட்டுள்ளன.

கரோனா நோய்த்தொற்றை தடுப்பதற்காகவும், பாதுகாப்பான பயணத்திற்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிகளையும் பயணிகள் பின்பற்ற அறிவுறுத்துகிறோம் என்றனர்.